# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/42 - 2019 මාර්තු මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.21

*2115/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 5/ 2007*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம்**

ஆட்களைப் பதிவுசெய்தல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின்மேல், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப் படுவதாகிய 24 ஆம் பிரிவின்கீழ் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

அஜித் பீ. பெரேரா,<br>
டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர்.

கொழும்பு,<br>
2019, மாச்சு 05.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் (இலத்திரனியல் முறையிலான ஆட்பதிவு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1A - G 29708 — 20 (2019/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. இவ்வொழுங்குவிதிகள், சேவைகளை வினைத்திறனுடன் வழங்குவதற்காக இலத்திரனியல் ஆவணங்களினதும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் பயன்பாட்டை வசதிப்படுத்துவதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதும் பேணப்பட்டதுமான தகவல் முறைமை ஒன்றாகவிருக்கின்ற ஆட்கள் பற்றிய தேசிய இடாப்பானது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் 6, 6அ, 9, 16, 17 மற்றும் 39ஆ ஆகிய பிரிவுகளின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "இலத்திரனியல் ஆவணங்கள்" அல்லது "இலத்திரனியல் பதிவேடுகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

ஆவணங்களை அல்லது பதிவேடுகளை உருவாக்குவதற்கு, கோப்பிடுவதற்கு, செயன்முறைப்படுத்துவதற்கு, பாதுகாப்பாகப் பிடித்துவைப்பதற்கு, பகிர்ந்துகொள்வதற்கு அல்லது வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

4. ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) இலத்திரனியல் ஆவணமொன்று அல்லது இலத்திரனியல் பதிவேடொன்று, அட்டவணை 'அ' இல் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் உருவாக்கப்பட்டும், கோப்பிடப்பட்டுப் பாதுகாப்பாகப் பிடித்துவைக்கப்பட்டும் மற்றும் பேணப்பட்டும் உள்ளது.

(ஆ) இலத்திரனியல் ஆவணமொன்றினதும் இலத்திரனியல் பதிவேடொன்றினதும் அந்தரங்கத் தன்மை, உண்மைத்தன்மை மற்றும் திட்பம் என்பவற்றைப் பாதுகாப்பதற்குப் பின்பற்றப்படும் கட்டுப்பாட்டு நடைமுறையும் நடவடிக்கை முறைகளும் அட்டவணை 'ஆ' என்பதற்கு இணங்கியவையாக உள்ளன.

(இ) ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டை அல்லது இலத்திரனியல் ஆவணத்தைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற்கான, பிடித்து வைப்பதற்கான அல்லது வழங்குவதற்கான எவையேனும் கட்டணங்களின் அல்லது விதிப்பனவுகளின் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான முறை அல்லது முறைமை அட்டவணை 'இ' என்பதற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளில்-

"சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் எனப் பொருள் படும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும் ;

"இலத்திரனியல்" என்பது, ஊடகத்தைப் பொருட்படுத்தாமல், இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது அதனையொத்த வேறு ஆற்றல்களினால் தோற்றுவிக்கப்படும், அனுப்பப்படும், பெறப்படும் அல்லது தேக்கிவைக்கப்படும் தகவல் எனப் பொருள்படும் ;

"இலத்திரனியல் ஆவணம்" என்பது, இலத்திரனியல் முறைகளின் மூலம் வழங்கப்பட்ட அல்லது மீளுருவாக்கப்பட்ட ஆவணமொன்றை, பதிவேடொன்றை, தகவலொன்றை, தொடர்பாடலொன்றை அல்லது கொடுக்கல் வாங்கலொன்றை உள்ளடக்கும்.

"இலத்திரனியல் பதிவேடு" என்பது, இலத்திரனியல் முறைகளின் மூலம் உருவாக்கப்பட்ட, தேக்கிவைக்கப்பட்ட, தோற்றுவிக்கப்பட்ட, பெறப்பட்ட அல்லது தொடர்புகொள்ளப்பட்ட எழுத்திலான ஓர் ஆவணம் அல்லது வேறு பதிவேடு எனப் பொருள்படும் ; அத்துடன்

"தகவல் முறைமை" என்பது, தகவலை உருவாக்குவதற்கான, தோற்றுவிப்பதற்கான, அனுப்புவதற்கான, பெறுவதற்கான, தேக்கிவைப்பதற்கான, மீளுருவாக்கம் செய்வதற்கான, காட்சிப்படுத்துவதற்கான, பதிவுசெய்வதற்கான அல்லது முறைவழிப்படுத்துவதற்கான இலத்திரனியல் முறைமையொன்று எனப் பொருள்படும்.

## அட்டவணை 'அ'

[ஒழுங்குவிதி 4 (அ)]

இலத்திரனியல் ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும், ஆணையாளர் தலைமையதிபதியினால் பின்வரும் முறையில் உருவாக்கப்படுதலும், கோப்பிடப்படுதலும், பாதுகாப்பாகப் பிடித்துவைக்கப்படுதலும் அத்துடன் பேணப்படுதலும் வேண்டும் :-

(அ) பனுவல் தரவு மற்றும் படிமத் தரவு ஆகிய இரண்டிலும் ;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட முறையொன்றில் ஆவணப்படிமங்களை ஊடுகதிர்ப்படமெடுத்தல் மூலமும் அத்துடன் தரவுக்கவர்வு மற்றும் தரவுப்பதிவு நடவடிக்கை முறைகள் ஊடாகவும் ;

(இ) தேசிய அடையாள அட்டைகள் தொடர்பில்-

(i) எல்லாத் தரவுகளும் தரவுத்தளமொன்றில் தேக்கி வைக்கப்படுதல் வேண்டும் ; அதன் நியமங்களும் அளவுக் குறிப்பீடுகளும் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) எல்லாப் படிமங்களும், மறைக்குறியீடாக்கம் செய்யப்பட்டு தகவல் முறைமையில் தேக்கிவைக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன், அணுக்கமானது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்துமூலம் வழங்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை 'ஆ'

[ஒழுங்குவிதி 4 (ஆ)]

இலத்திரனியல் ஆவணமொன்றினதும் இலத்திரனியல் பதிவேடொன்றினதும் அந்தரங்கத் தன்மை, உண்மைத்தன்மை மற்றும் திட்பம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான ஆணையாளர் தலைமையதிபதியினால் பின்பற்றப்பட வேண்டிய கட்டுப்பாட்டு நடைமுறையும் நடவடிக்கை முறைகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) சேவையகங்களின் பௌதிகப் பாதுகாப்பு உட்பட, ஆணையாளர் தலைமையதிபதியின் தகவல் முறைமையின் சேவையகங்களில், சேவையக முறைமைகளில் மற்றும் வலையமைப்புக்களில் தேக்கிவைக்கப்பட்ட எல்லாத் தரவுகளும் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு அணுக்க உரிமைகளுடன் முறைமை நிர்வாகியின் மேற்பார்வையின்கீழ் பாதுகாப்பாகப் பேணப்படுதல் வேண்டும் ;

(ஆ) இலத்திரனியல் ஆவணங்களும் இலத்திரனியல் பதிவேடுகளும் ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் மாத்திரம் உருவாக்கப்பட, திருத்தியமைக்கப்பட, பார்க்கப்பட அத்துடன் பகிரப்பட வேண்டும் ;

(இ) அணுக்கமானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் தகவற் பாதுகாப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முறைகளுக்கூடாக, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நோக்கங்களுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு தகவல் முறைமையில் வேறுபட்ட வேலை வகிபாகங்கள் குறித்தளிக்கப்படுதல் வேண்டும் ;

(உ) தேசிய அடையாள அட்டைகளுடன் தொடர்புடைய தரவுகள், தரவுப்பதிவுசார் வழுக்களைக் குறைப்பதற்கென பல்வேறு இடங்களில் செல்லுபடியாக்கப்படுதலும், சரிபார்க்கப்படுதலும் மற்றும் திருத்தப்படுதலும் வேண்டும். மூல ஆவணங்களின் ஊடுகதிர்ப்படமெடுக்கப்பட்ட படிமங்கள், கொடுக்கப்பட்ட எந்த நேரத்திலும் தரவுகளைச் சரிப்பார்ப்பதற்காக, தகவல் முறைமையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குக் கிடைக்கக்கூடியனவாகச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஊ) தகவல் முறைமையின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், சொல்லப்பட்ட முறைமையில் எவையேனும் தரவுகளுக்கு ஏதேனும் மாற்றத்தைச் செய்யின், திருத்தியமைக்கப்பட்ட புலங்கள், பயனர் அடையாளம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் சேர்த்து அது தகவல் முறைமையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தகவல், ஆணையாளர் தலைமையதிபதியினால் பதியப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும் ;

(எ) எந்த நோக்கங்களுக்காகத் தகவல் முறைமையிலிருந்து அறிக்கைகள் தோற்றுவிக்கப்படலாமோ அந்த நோக்கங்களை ஆணையாளர் தலைமையதிபதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஏ) ஆணையாளர் தலைமையதிபதி, எந்த அலுவலர்கள் தகவல் முறைமையிலுள்ள தரவுகளினதும் மற்றும் இலத்திரனியல் பதிவேடுகளினதும் இலத்திரனியல் ஆவணங்களினதும் நாளாந்த மற்றும் வாராந்த காப்பகப்படுத்தல்களை எடுக்க வேண்டுமோ, அந்த அலுவலர்களைப் பதவிப்பெயர் குறித்து நியமித்தல் வேண்டுமென்பதுடன், எவ்வமைவிடத்திலும் முறையிலும் அத்தகைய காப்பகப்படுத்தப்பட்ட தகவல்கள் தேக்கி வைத்திருக்கப்படலாமோ அவ்வமைவிடத்தையும் முறையையும் குறித்துரைத்தலும் வேண்டும்.

## அட்டவணை ‘இ’

[ஒழுங்குவிதி 4 (இ)]

ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டை அல்லது இலத்திரனியல் ஆவணத்தைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற்கான, பிடித்துவைப்பதற்கான அல்லது வழங்குவதற்கான எவையேனும் கட்டணங்களின் அல்லது விதிப்பனவுகளின் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான முறை அல்லது முறைமை பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) ஆணையாளர் தலைமையதிபதி, தகவல் முறைமையைப் பயன்படுத்தி ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டை அல்லது இலத்திரனியல் ஆவணத்தைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற்கான, பிடித்துவைப்பதற்கான அல்லது வழங்குவதற்கான விதிப்பனவுகளுட்பட, வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல் வேண்டும் என்பதுடன் அவர், ஆளொருவரின் தேசிய அடையாள அட்டையிலுள்ள விபரங்களின் மெய்யானதன்மையை சான்றுப்படுத்துதலும் வேண்டும் ;

(ஆ) தகவல் முறைமையைப் பயன்படுத்தி வசதிப்படுத்தப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்படவுள்ள கட்டணங்களும் விதிப்பனவுகளும், காலத்திற்குக் காலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டை அல்லது இலத்திரனியல் ஆவணத்தைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற்கான, பிடித்துவைப்பதற்கான அல்லது வழங்குவதற்கான கொடுப்பனவுகளுட்பட, வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் பெறப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் தகவல் முறைமைக்கூடாக நாளதுவரைப்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் இலத்திரனியல் பதிவேட்டை அல்லது இலத்திரனியல் ஆவணத்தைக் கோப்பிடுவதற்கான, உருவாக்குவதற்கான, பிடித்துவைப்பதற்கான அல்லது வழங்குவதற்கான கொடுப்பனவுகளுட்பட, வழங்கப்பட்ட சேவைகளுக்காகப் பெறப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு தொடர்பிலான அறிக்கைகள் தகவல் முறைமையிலிருந்து வழங்கப்படுதலும் தோற்றுவிக்கப்படுதலும் வேண்டும் ;

(உ) ஆணையாளர் தலைமையதிபதி, தகவல் முறைமையைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட சேவைகளுக்காக, இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி, கட்டணங்களும் விதிப்பனவுகளும் எம்முறையில் அறவிடப்படலாமோ அம்முறையைக் குறித்துரைக்கலாம்.

*03-1407*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.